SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA1 பரீட்சை - ஜூலை 2018

**(July 2018 Examination - AA1 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA15**

# வியாபார தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் (BOM)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வண. முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669



**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்
கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA1 பரீட்சை – ஜூலை 2018
## (AA15) வியாபார தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்
## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**இருபது (20) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

### வினா 1ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | (2) |
| 1.2 | (3) |
| 1.3 | (2) |
| 1.4 | (3) |
| 1.5 | (2) |
| 1.6 | (4) |
| 1.7 | (4) |
| 1.8 | (1) |
| 1.9 | (2) |
| 1.10 | (3) |
| 1.11 | (4) |
| 1.12 | (2) |
| 1.13 | (4) |
| 1.14 | (3) |
| 1.15 | (4) |
| 1.16 | கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டு முறைமை (TPS) |
| 1.17 | தொழில்முயற்சி வளதிட்டமிடல் (ERP) |
| 1.18 | தொழிநுட்ப அபிவிருத்தி |
| 1.19 | வேலை சுழற்சி |
| 1.20 | வேறுபடுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் |

***(மொத்தம் 40 புள்ளிகள்)***

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**நான்கு (04) கட்டாய வினாக்கள்.**
**மொத்தம் 40 புள்ளிகள்**

## வினா 2ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) **தனியுடமை வணிகங்களின் அனுகூலங்கள் :**

- தனிப்பட்ட அர்ப்பணிப்பினூடாக வணிகத்தை விருத்தி செய்ய முடிதல்.
- வணிகம் உழைக்கும் இலாபம் முழுவதையும் தனித்து அனுபவிக்க முடிதல்.
- தீர்மானங்களை விரைவாக மேற்கொள்ள முடிதல்.
- வணிகத்தை இலகுவாக கட்டுப்படுத்த முடிதல்.
- வணிகத்தை இலகுவாகவும், குறைந்த மூலதனத்துடனும் ஆரம்பிக்கமுடிதல்.
- வணிகத்தை இலகுவாக கலைக்கலாம்.
- அரச கட்டுப்பாடுகளிலிலுருந்து நீங்கிய கணிசமான சுதந்திரத்தை கொண்டிருத்தல்.

**தனியுடமை வணிகங்களின் பிரதிகூலங்கள்:**

- வரையருக்கப்படாத நட்டப்பொருப்பினை கொண்டிருப்பதனால் உரிமையாளர் தனது சொந்த சொத்துக்களையும் விழக்க நேரிடல்.
- கூட்ட ஆளுமை இன்மை.
- தனி ஒருவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் வெற்றியளிக்காமை.
- நிதி திரட்டுவதற்கான வளங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.
- பொருத்தமான ஊழியர்களை பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிரமம்.

***(05 புள்ளிகள்)***

(b) **வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் ஊடாக ஒரு வணிக அமைப்பு பெற்று கொள்ள கூடிய சேவைகள்:**

- வைப்புக்களை ஏற்றல் ( சேமிப்பு / தவணை வைப்புகள் )
- கடன் தொடர்பான சேவைகள் ( கடன் / அடகு பிடித்தல் )
- வெளிநாட்டு செலவாணி வைப்புக்கள் பராமரிப்பு ( NRFC,REC )
- நாணய கடித சேவை.
- நடைமுறை கணக்கு தொடர்பான சேவைகள்.
- பாதுகாப்பு பெட்டக சேவை / வசதி.
- ஆலோசனை சேவைகள்.
- வங்கி உத்தரவாத சேவைகள்.
- வெளிநாட்டு / அந்நிய செலாவணி கொள்வளவு மற்றும் விற்பனை
- சர்வதேச வர்த்தகத்திற்கான வேறுபட்ட சேவைகள்
- பயணிகள் காசோலைகளை வழங்கல்.
- தன்னியக்க வங்கி சேவை.

***(05 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## வினா 3ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) **ஒரு வணிகத்திற்கான தர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்**

வணிக நிறுவனங்கள் பொருட்கள் சேவைகளை வழங்குதல் தொடர்பான செயன்முறையை சீரான முறையில் மேற்கொள்வதற்கு தரமுகாமைத்துவம் உதவுகின்றது. அது மற்றுமின்றி தர முகாமைத்துவமானது தரவுகளை குறைத்து கொள்வதூடாக கிரயத்தை கட்டுப்படுத்தவும், வளப்பானை வினைத்திறனாக மேற்கொள்ளவும் வழிவகுக்கிறது. அத்துடன் சுலபமான செயற்பாடுகளுக்கு வசதியளித்தல், சுகாதாரமாக வேலைச்சூழலை உருவாக்கல், ஊளியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களினது விசுவாசத்தை அதிகரிக்க செய்தல் என வெற்றிகரமான வணிகத்திற்கு துணைப்புரிகிறது.

1. **வாடிக்கையாளர்களினது தேவை மற்றும் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்தல்.**

   தரமான பொருட்களை நுகரவே வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு வாடிக்கையாளர்களது எதிர்பார்ப்புக்கள் நிறைவு செய்யப்படாத விடத்த வேறு வணிகங்களின் நாட அவர்கள் எத்தனிப்பர், எனவே வாடிக்கையாளர்களை திருப்தி படுத்தி அவர்களது நம்பிக்கையை தக்கவைத்த கொள்வதற்கும் (வாழ்க்கை கால வாடிக்கையாளர்களை கட்டியெழுப்பவதற்கும்) தரத்தை பேணல் சிக்கலானதே. அவ்வாறு தரம் பூர்த்தி செய்யப்படும் போது எதிர் காலத்திலும் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வணிகத்தின் பொருட்களை வாங்குவார்கள்.

2. **வணிகங்களின் வருமானம் மற்றும் இலாபத்தை உயர்த்துதல்.**

   தரமான உற்பத்திகள் தொடர்ச்சியான/நீண்ட காலத்திற்கான வரமானம் மற்றம் இலாமீட்டலுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. தரமற்ற உற்பத்திகள் செலவுகளை அதிகரிக்கும்.

3. **சிறந்த / தரமிக்க பொருட்கள் சேவைகளின் உற்பத்தியை தரமகாமைத்துவம் உருதிப்படுத்தும்.**

   குறித்த உற்பத்தியில் தரமானது அதன் செயல்திறன், தம்பகத்தன்மை, நீடித்த பாவனை என்பவற்றின் ஊடாக அளவிடப்படுகிறது. குறித்த நிறவனத்தை அதன் போட்டி நிறுவனங்களிடமிருந்து வேறுபடுத்த உதவும் பிரதான அளவீடு / காரணி தரமாகும்

4. **இருப்பு தொடர்பான வீண்விரையங்களை கட்டுப்படுத்த / குறைத்துக்கொள்ள முடியம்**

   வீண் விரையங்களை குறைத்து கொள்ள தர முகாமைத்துவம் உதவுகிறது வணிக நிறுவனமானது பயனுறுதிமிக்க தர முகாமைத்துவத்தை மேற்கொள்ளுமாயின் உற்பத்தியிலிருந்து சேதமடைந்த / விரயமான பொருட்களின் எண்ணிக்கையை குறைத்து கொள்ள முடியும்.

5. **நிறுவனத்திற்கான நன்மதிப்பை பெற்றுக்கொள்ள முடியும்**

   நிறுவனமொன்றின் நன்மதிப்பில் தரமே பாரிய தாக்கத்தை ஏற்படுத்த கூடியது. போட்டி மிக்க சந்தையில் குறித்த நிறுவனத்தை / அதன் நன்மதிப்பை போட்டி நிறுவனங்களிலிருந்து வேறுபடுத்தும் பிரதான காரணி “தரமே” ஆகும். உற்பத்தியின் ஊடாக வெளிப்படுத்தப்படும் தரத்தில் ஏற்படும் குறைவானது / வீழ்ச்சியானது நிறவனம் தொடர்பில் போலி வாந்திகளை ஏற்படுத்தி நன்மதிப்பையும் சீர்குழைக்கும்.

6. **உற்பத்திகளை உயர்த்த முடியும்**

   நிறுவனம் ஒன்றின் அகச்செயன்முறையில் முன்னேற்றம் காணவேண்டிய பரப்பினை இனங்கான தரமுகாமைத்துவம் வழிவகுக்கிறது. இவ்வாறு தேவையற்ற (வீண்) பணிகளை நீக்கி / ஏற்கனவே உள்ளவற்றை முன்னேற்றி நிறுவனத்தின் உற்பத்தி திறனை உயர்த்த துணையாய் அமைகின்றது.

***(06* புள்ளிகள்)**

(b) **உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தரம் தொடர்பான அம்சங்கள்:**

- பண்புகள்
- உறுதிப்படுத்தல்
- பாதுகாப்பு
- செயல்திறன
- நம்பகத்தன்மை
- நீடித்த பாவனை
- அழகியல் குணாதிசயங்கள்
- ஏனைய அம்சங்கள்

***(04* புள்ளிகள்)**

***(*மொத்தம் 10 புள்ளிகள்*)***

## வினா 4ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) **ஒரு வணிக நிறுவனத்திற்கு மனித வள முகாமைத்துவத்தின் (HRM) :**

எந்த ஒரு வணிக அமைப்பிலும் மனித வளமே (ஊழியர்கள்) மிக முக்கியமான வளமாகும். ஒரு வணிக அமைப்பை முகாமைத்துவம் செய்வது கடினமானதொன்றல்ல. ஆனால் ஊழியர்களே / மனித வளங்களை வேலையில் முகாமை செய்வதென்பது ஒரு கடினமான பணியே அதாவது மனிதவளம் எனப்படுவது நிறுவன நோக்கங்களை பயனுறுதி மிக்க வகையிலும், வினைத்திறனாக அடைவதற்கு பங்களிப்பை வழங்கக்கூடிய வகையிலான ஊழியர்ளே உருவாக்கள் மனித உறவகளை சிறந்த முறையில் பேணுதல், அபிவிருத்தி செய்தல் ஆகும். ஏன் எனில் சரியான நபரை சரியான நிலையில் சரியான நேரத்தில் பெற்றுக்கொள்ள HRM அவசியமாகும். அது போல ஊழியர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்தல், வெகுமதிகளை பெற்றக்கொடுத்தல் மற்றும் அவர்களுக்கான பயிற்சி அளித்தல், அபிவிருத்தி செய்தலுக்கு HRM முக்கியமாகும். அதுமட்டுமன்றி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்தினுடாக பாதுகாப்பான வேலை சூழலை உருவாக்க மாற்றங்களை கையாளுவதற்க HRM முக்கியமாகும். ஒரு வணிக நிறுவனத்தில் HRM கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மனித சக்தியைப் பொருத்தமாகப் பயன்படுத்த முக்கியமானது, ஏனெனில் நிர்வாகத்தின் மக்கள் பரிமாணத்தைப் பற்றி இது அக்கறை கொண்டுள்ளது.

1. **ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்ய அவசியமாகும்**

   நிறுவன வெற்றிடங்களுக்கு தகுதியான நபர்களை சரியான நேரத்தில் சரியான வேலைகளழல் நியமிக்க உதவுகிறது. எந்தவொரு வணிகத்தினதும் நீடித்த வாழ்விற்கு புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் பங்களிப்பு செய்யும்.

2. **ஊழியர்களிற்கிடையில் தொழில் உறவுகளை ஏற்படுத்தல்**

   ஊழியர்களிடையே சிறந்த கைத்தொழில் உறவினை சுமூகமான வேலைச் சூழலுக்கிடையே பெற்று கொள்ள உதவுகிறது. அத்துடன் ஊழியர்களிடையே உலர் பற்றுறுதியை பேணவும் / அதனை அடைவதற்கும் அவசியமாகும்.

3. **ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி படுத்தல்**

   ஒவ்வொரு நிறுவனங்களும் வேலைச்சூழல் மற்றும் இடத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல் மிக முக்கியமாகும். மனிதவள முகாமைத்துவமானது பாதுகாப்பான வேலைச்சூழலை ஊழியர்களுக்கு வழங்குவதற்கான அணைத்து வழிமுறைகளையும் வழங்குகின்றது.

4. **ஊளியர்களுக்கான நலன்கள் மற்றும் நட்ட ஈடுகளை வழங்குதல்**

   ஊழியர்களுக்கான சலுகைகளை வழங்குதல் வேண்டும். இது மனித வள திணைக்களத்தின்

நிபுணர்களால் நிர்ணயிக்க பட வேண்டும் இது HRM ஊடாக தீர்மானிக்கப்படும் வேண்டும். சலுகைகள் ஊழியர்களை தொடர்ந்து நிறுவனத்தில் தக்க வைக்க உதவிபுரிகிறது.

5. **பயிற்சி மற்றும் அபிவிருத்தி**

நிறுவனமொன்றின் அனைத்து ஊழியர்களும் முறையான பயிற்சிகளை பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு நிறுவன இலக்குகளை அடைவதற்கு அனைத்த ஊழியரடகளுகான பயிற்சி மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிற்கு HRM அவசியமாகும்.

6. **ஊழியர்களுக்கான வேலைதிருப்தியை ஏற்படுத்தல்**

நிறுவனமொன்றின் தொழில் வழங்குநர் தொழிலாளர் என்போருக்கிடையிலான கைத்தொழில் உறவை பலப்படுத்துவதனூடாக உயர் செயல்திறனை அடைய நியாயமான திருப்திகரமான மட்டங்களில் பணி புரியும் வண்ணம் வேலைச்சூழலை உருவாக்க பங்களிக்கின்றது.

7. **சட்ட இனக்கப்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்**

ஊழியர்களுக்கு பொருத்தமான வேலைச்சூழல், நிபந்தனைகள் மற்றும் வசதிகள் என்பவற்றை கட்டாயமாக நடைமுறைப்படுத்தல் வேண்டும் என வலியுருத்தும் அரச சட்டங்களும் உள்ளன. இவ்வாறு ர்சுஆ ஆனது அச்சட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

8. **தரமான வேலை வாழ்க்கையை பேணுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் (தொழில் வாழ்க்கைத் தரம்)**

ஊழியர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் முடிவுகள் குறித்து ஊழியர்கள் தங்கள் யோசனைகளையும் ஆலோசனைகளையும் முன்வைக்க வாய்ப்பளித்தல். HRM வேலை வாழ்க்கை தரத்தை மேம்படுத்த உதவுகிறது.

9. **நிறுவனம் தனது இலக்குகளை அடைவதற்கு உதவி பெறுகிறது.**

HRM ஆனது தகுதி மற்றும், திறமையுள்ள மற்றும் நன்கு ஊக்குவிக்கப்பட்ட ஊழியர்களை தோற்றுவிப்பதனால் நிறுவனம் தன்னுடைய எதிர்கால இலக்குகளை வெற்றிகரமாக அடைய உதவி புரிகிறது.

***(06* புள்ளிகள்)**

(b) **பயிற்ச்சியளித்தல் செயன்முறையின் போதான படிமுறைகள்.**

i. பயிற்சிற்கான தேவைப்பாட்டினை / நோக்கத்தினை இனங்காணல்.
ii. பயிற்சியளித்தல் தொடர்பான இலக்குகளை ஸ்தாபித்தல்.
iii. பயிற்சியளித்தல் முறையினை தெரிவு செய்து கொள்ளல்.
iv. பயிற்சி திட்டமொன்றினை தயாரித்தல்.
v. பயிற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்தல் (பயிற்சியளித்தல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
vi. பயிற்சியளித்தல் நிகழ்ச்சியின் பயனுறுதியினை மதிப்பீடு செய்தல்.

***(04* புள்ளிகள்)**

***(*மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) **ஒரு வணிக நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம்.**

வணிக வெற்றி அதன் சந்தைப்படுத்தல் முயற்சிகளில் உள்ளது. இன்றைய வணிகத்தின் பெரும்பாலான அம்சங்கள் வெற்றிகரமான சந்தைப்படுத்தலில் சார்ந்தது உள்ளது. ஒட்டுமொத்த சந்தைப்படுத்தல் கலவை உற்பத்தி, விலை, விநியோகம், விளம்பரம், பொது உறவுகள், விற்பனை மற்றும் சலுகைகள் மீது சார்ந்தது உள்ளது. சந்தைப்படுத்தல் என்பது ஒரு தயாரிப்பு அல்லது சேவையை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தி வாங்குவதற்கு ஊக்குவிக்கின்றது. வணிகத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் எதிர் கால வாடிக்கையாளர்களை இனம் காணுதல் முக்கியமானதாகும். எந்த சந்தைப்படுத்தல் முயற்சியையும் வாடிக்கையாளர்களின் புள்ளியில் இருந்து ஒரு வாடிக்கையாளர்களின் தேவை உருவாக்க வேண்டும். சரியான விலையை நிர்ணயிக்க சரியான விநியோக முறையை தேர்ந்து எடுக்க உகந்த விற்பனை மற்றும் சலுகைகளை நிர்ணயிக்க சந்தைப்படுத்தல் முக்கியமானது ஆகும். முடிவில் வாடிக்கையாளர்களின் தேவைகளை திருப்திப்படுத்துவதன் மூலம் இலாபங்களைப் பெறுவதற்கு சந்தைப்படுத்தல் முக்கியமானது ஆகும்.

1. **வாடிக்கையாளனின் எதிர்பார்ப்புக்களை அறிய உதவுகின்றது**

   உச்ச திருப்திகளுடன் கூடியவாறு வாடிக்கையாளர்களை கவருதல் மற்றும் அவர்களை தக்க வைத்து கொள்ளல் என்பது வெற்றிகரமான வணிகமொன்றில் பிரதான சந்தைப்படுத்தல் நோக்கமாகும்

2. **வணிகத்தின் இலக்கு சந்தையை இனங்கான உதவுகின்றது.**

   வணிகமானது எந்த சந்தைக்கு தனது உற்பத்தி பொருளை விநியோகிப்பது என்ற சரியான செய்தியை வழங்குவது பற்றிய செயன்முறையும் சந்தைப்படுத்தலே ஆகும் இவ்வாறு சந்தைப்படத்தல் இல்லாமல் நிறுவனம் இலக்கு வாடிக்கையாளர்களை கண்டுபிடிக்க முடியாது.

3. **வணிகத்தின் வியாபார குறியை / பண்டக்குறியை பலப்படுத்தும்**

   காலம் காலமாக, பண்டக்குறி தொடர்பிலான நம்பிக்கையை சந்தைப்படுத்தலே ஏற்படுத்தி உள்ளது. பலமான பண்டக்குறியீட்டினூடாக குறித்த உற்பத்தி பொருளை ஏனைய உற்பத்தி பொருளில் இருந்த இலகுவில் வேறுபடுத்தி / தனித்துவமாக விளங்க முடியும்.

4. **நிறுவனம் ஒன்றின் இலக்குகளை அடைய உதவி புரிகின்றது**

   வாடிக்கையாளர்கள் குறித்த உற்பத்தியினூடாக உச்ச திருப்தி அடையும் போது நிறுவனத்தின் வருமான அதிகரிப்பிற்கு இட்டுச்செல்லும். இதன் விளைவாக நிறுவனம் தன்னுடைய இலக்குகளை அடைய வழிவகுகின்றது.

5. **போட்டி மிக்க வணிக நிலைமையின் அனுகூலங்களை அடைய உதவி புரிகிறது.**

   சந்தைப்படுத்தல் ஆனது நிறுவனம் ஒன்று எந்த செயல்களை மற்ற போட்டி நிறுவனங்களை விட சிறப்பாக செய்ய வேண்டும் போட்டி இனம் காண உதவுகிறது. மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது போட்டித் திறன் மிக்க நிறுவனமாக செயல் பட உதவுகிறது

***(06* புள்ளிகள்)**

(b) **ஒரு வெற்றிகரமான பண்டக்குறியொன்று கொண்டிருக்கும் குணாதிசயங்கள்:**

- பண்புகள்
- அனுகூலங்கள்
- பெறுமதிகள்
- ஆளுமை
- கலாசாரம்
- பயனாளர்

***(04* புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

**பகுதி - C**

**ஒரு (01) கட்டாய வினாக்கள்.**
**மொத்தம் 20 புள்ளிகள்**

## வினா 6ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) **இந்த Bert and sons கம்பனியின் செயற்பாடுகளுக்கு உலகமயமாக்கல் நன்மை ஏற்படுத்தும் விதம்.**

இந்த வணிகமானது ஏற்கனவே ISO தர விருதினை பெற்றுள்ளது இது உலக மயமாக்கலின் ஒரு சாதகமான விடயமாகும். இக்கம்பனியின் செயற்பாடுகள் உலகத்திற்கு அமைவாக உள்ளது. மேலும் இந்த கம்பனி கவர்ச்சிகரமான இணையத்தளத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இவ் இணையத்தின் ஊடாக 24மணி நேர கொள்வனவு செய்யக்கூடிய வசதிகளை உருவாக்கி உள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் இலத்திரனியல் வணிகம் என்பன உலகமயமாக்கலின் அங்கங்கள் ஆகும். இது நிறுவனத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

1. **வணிக செயற்பாடுகளை விரிவாக்கத்திற்கு**

   இந்த கம்பனியானது தன்னுடைய வணிகம் மற்றும் நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்து நாடாளவிய ரீதியில் விநியோகத்தை ஏற்படுத்த முடியும். மேலும் இந்த கம்பனி வெளிநாட்டிலிருந்து வலு சக்தியை சேமிக்க கூடிய வாய்ப்பு உள்ளது

2. **உயர்தரம் வாய்ந்த தொழிநுட்பங்களை பெற முடிதல்.**

   இக்கம்பனியானது இணையத்தளத்தினூடாக தன்னுடைய சேவைகளை விஸ்தரித்தல்.

3. **சர்வதேச தர விருதை பெற்றுள்ளமை**

   உலகமயமாக்கல் இக்கம்பனியானது ISO தரமுறையின் கீழ் ISO தர விருதினை பெற்றுள்ளமை

4. **சுதந்திர தடையற்ற வியாபாரம்**

   சர்வதேச வர்த்தகமானது பல்வேறு புதிய பொருட்கள், சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடியமை.

***(06* புள்ளிகள்)**

(b) **Bert and sons கம்பனியின் சந்தைப்படுத்தல் கலவை**

- உற்பத்திக்கலவை : புத்தம் புதிய வெதுப்பக உற்பத்திகள்
- விலைக்கலவை : செலுத்தக்கூடிய, நியாயமான விலை( வாடிக்கையாளரின் பார்வை)
- விநியோக கலவை : நாடளாவிய ரீதியில் விநியோகிக்க கூடிய 50 விற்பனை : நிலையங்கள் மற்றும் இணையத்தள விற்பனை பகுதி
- மேம்படுத்தல் கலவை : விளம்பரத்தில் (கவர்ச்சிகரமான இணையத்தளம்)

***(06* புள்ளிகள்)**

(c) **வணிக நடவடிக்கைகளை வெளிப்படுத்தலின் ( BPO ) நன்மை, தீமைகள்**

| **நன்மைகள்** | **தீமைகள்** |
|---|---|
| வணிக செயன்முறையின் வினைத்திறனை அதிகரிக்கும். | நிறுவனத்தின் இரகசியங்களை வெளியேறல். ( தரவு தனித்தன்மை மீறல்) |
| இது வணிகர் ஒரு நடவடிக்கையில் முகாமையாளர் அதிக அக்கறை செலுத்த வழி வகுக்கும். | இது வணிக நடவடிக்கைகளை அன்றாட செலவுகளை மதிப்பிடலில் சிரமத்தை ஏற்படுத்தும். |
| நிறுவனத்தின் முக்கிய செயற்பாட்டில் முதலிட முடியும். | சேவை வழங்குவோரில் அதிகம் தங்கியிருத்தல். |

***(04* புள்ளிகள்)**

**(d) இக்கம்பனியின் அக்கறையுடைய தரப்பினர்**

- உரிமையாளர்கள்
- முகாமையாளர்கள்
- போட்டியாளர்கள் (சர்வதேச உணவு வழங்குனர்)
- விநியோகத்தர்கள்
- ஊழியர்கள்

***(04* புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2018 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*

*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*